எண்: 24/2025 நாள்: 14.03.2025

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003.**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையில் பணிபுரியும் தற்காலிக தட்டச்சர்களுக்கான சிறப்பு போட்டித் தேர்வு (அறிவிக்கை எண். 18/2024 நாள் 25.11.2024) கடந்த 08.02.2025 மு.ப. அன்று நடைபெற்ற எழுத்துத்தேர்வில் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 05.03.2025 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது. மேற்கண்ட தேர்விற்கான தற்காலிக தட்டச்சர்களுக்கான மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு 20.03.2025 அன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண் 3, தேர்வாணையச் சாலை (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்), சென்னை-600 003 - ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக்கடிதத்தினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in - லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு, அதற்கான விவரம் குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சல் (E-mail) மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. தேர்வர்கள் மேற்படி மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ச.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,
செயலாளர்